புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# எட்டுத் தொகை நூல்களில் பண்பாட்டுக் கூறுகள்

முனைவர்.த.அனிதா ஆனிலெட்
உதவிப்பேராசிரியர்,
முஸ்லிம் கலைக்கல்லூரி
திருவிதாங்கோடு.

## முன்னுரை

சங்ககால மக்கள் இயற்கையொடு கலந்து முறைப்படுத்தப்பட்ட வாழ்வியல் முறையை பண்பாடு, நாகரிகம், பின் புலத்தோடு வாழ்ந்திருக்கிறார்கள். எட்டுத்தொகை இலக்கிய பிரதிகளில் இதனை நாம் நுட்பமாக உணரலாம். இதனை இந்த கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

## தமிழ் பண்பாடு

தமிழர்களின் நாகரீக வளர்ச்சி கிறிஸ்துவுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பே அடைந்திருக்க வேண்டும் நிலப்பகுதிகளை ஐந்து இயற்கை கூறுகளாக பிரிக்கலாம் என்பதை தமிழர்கள் உணர்ந்திருந்தார்கள். தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் நூலான தொல்காப்பியத்தில் நிலங்கள், தெய்வங்கள் பற்றியெல்லாம் பல செய்திக்ள பார்க்க முடிகிறது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையில் சொல்லவும் படுமே!"

(10) தொல்.பொர.அகத்.95)

என்ற தொல்காப்பியரின் கூற்றுப்படி பண்டைய தமிழ் மக்கள் பிரித்த ஐந்து நிலங்கள் பற்றியும் அந்த ஐந்து நிலத்திற்குரிய கடவுள்கள் பற்றியும் ஐந்து நிலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் பற்றியும் தமிழர்களின் வாழ்க்கை சிறப்பையும், வரலாற்று சிறப்பையும் தொல்காப்பியத்தின் வழி நாம் அறியலாம் பண்டைய தமிழ் மக்களின் களவு, கற்பு வாழ்க்கை முறையை கொண்டு தமிழ் பண்பாடு ஒரு தனித்துவம் மிக்க பண்பாடு என்று கூறலாம். வேட்டை சமூகம் கால் நடை வளர்ப்பு போன்ற முறைகளில் தமிழ் சமூகம் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது. இயற்கை இயற்கையோடு இணைந்த மிக சிறந்த வாழ்க்கையை தமிழர்கள் நடத்தினார்கள். அதன் பிறகு வந்த வைதீக சமூக, சமய கலப்பால் யாகத்தின் அடிப்படையில் பண்டைய காலத்தில் ஆரிய பண்பாடு கலப்பு இல்லாமல் தமிழர்கள் திருமணம் நடைபெற்றதையும் தமிழர்கள் களவு, கற்பு, ஏறுதழுவுதல் உடன்போக்கு என்ற திருமண நிகழ்வு நடைபெற்றதையும் அறிய முடிகிறது. இதுபோல சங்ககாலம் உணவு தேடும் வாழ்க்கை முறை மாறி உணவு உற்பத்தி செய்யும் முறையில் மிகுந்த கவனத்தை செலுத்திய காலம் இதனால் நிலையாக குடியிருப்புகள் உள்ள வாழ்வியல் நெறிகளை சங்கால சமுதாய வாழ்க்கை நமக்கு காட்டுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நான்கு திணைகளில் நான்கு விதமான உற்பத்தி முறைகளும் உறவுமுறைகளும் உருவாயின. மருத நிலம் உடமை சமுதாயமாக மாறியதையும் அரசின் உருவாக்கத்தில் மருத நிலம் முக்கியத்துவம் பெற்றதையும் சங்கபாடல்கள் நமக்கு காட்டுகின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகை திணைகளும் இயற்கை சூழலை மையமாகக் கொண்டு அமைந்தன. குறிப்பாக குறிஞ்சி மலையின் மலை வளம் புன்சை வேளாண்மையை அடிப்படையாக கொண்டிருந்தன. தினையும், வெண் நெல்லும், புல் அரிசியும், மூங்கில் அரிசியும், அவரையும், கிழங்கும், தேனும் வேட்டை பொருளும் இந்த சமுதாயத்தின் அடிப்படை உணவுகள் என்பதை புறநானூறு கூறுகிறது.

"உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிர் னெல்வினையும்மே
------------------------------
திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே"2

என்றும்,

"கருங்கால் வரகே இரங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகள நவரைல்யா
பிந்தான் கல்லது உணாவுமில்லை"3

பதிற்றுப்பத்தில் பண்பாடு

அக்காலச் சேரநாட்டுப் பகுதியில் விளங்கிய பண்பாடு பதிற்றுப்பத்தால் அறியப்படுகின்றது. சேரநாட்டில் அக்காலத்திலேயே வேத நெறிக்கு மதிப்பிருந்தது அந்தணர்க்கு அந்நாட்டு வேந்தர் மிக மதிப்பளித்தனர். அரசர்கள் தவம் செய்வதால் பெரும் செல்வங்;கள் கைகூடும் எனக் கருதினர். பெருஞ்சேரங் இரும்பொறை என்ற அரசன் தன் புரோகிதனைத் தவம் செய்ய வருமாறு அறிவுறுத்தினான். அவ்வரசன் மன அமைதி, செல்வம், மகப்பேறு, கொடை, தெய்வ உணர்வு ஆகியன தவத்தால் அமையும் என தெரிவித்துப் புரோகிதனைத் தவம் செய்யக் காட்டிற்கு அனுப்பினான். நோட்டு அயிரை மலையில் கொற்றவை கோயில் இருந்தது. போரில் வெற்றி வேண்டி அரசன் அயிரைமலைக் கொற்ற என்ற அந்தணப்புலர் வேண்டி கொண்டற்கேற்பப் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற சேர அரசன் பத்துப்பெரு வேள்விகளைச் செய்வித்தான் இவை, பதிற்றுப்பத்திலிருந்து பெறும் பண்டைய தமிழர் பற்றிய செய்திகளாகும்.

பரிபாடலில் பண்பாடு

பரிபாடல் பாண்டி நாட்டுப் பழக்க வழங்கங்கள் சிலவற்றை குறிப்பிடுகின்றது. கண்ணன் பலதேவன் ஆகிய இருவரையும் அக்காலத்தவர் பெரும்பெயர் இருவர் எனக்கூறினர். இவ்விரு தெய்வங்களுக்கும் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள அழகர் மலையில் கோயில் இருந்தது. இம்மலை அக்காலத்தில் திருமாலிருந்த சோலை மலை எனப்பட்டது. மக்கள் குடும்பம் குடும்பமாகச் சென்று இம்மலையில் திருமாலையும், பலதேவனையும் வழிபட்டனர். தலைவன் பரத்தையோடு சேர்ந்து வையைலில்;;;;;;; நிராடியதைப் பரிபாடல் காட்டுகின்றது. மக்கள் வையையாற்றுப் புதுவெள்ளத்தில் நீராடும்போது பொன்னால் செய்தறத்தை, ரண்டு, இறால், வாளை மீன் அகியவற்றை நீரில் விட்டனர். மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளில் ஆகமம் அறிந்த பூசகர் விழா நடத்தினர். அப்போது பெண்கள் தைந்நீராடல் எனப்பெறும் நோன்பை மேற்கொண்டனர் நிலம் மழை பெற்றுக் குளிர்க என்று மகளிர் கூறி நீரில் மூழ்கி ஆடும் நீராடல் அம்பா ஆடல் எனப்பட்டது. இவ்வழக்கமே பிற்காலத்தில் பாவை நோன்பாயிருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன் கோயில் மண்டபத்தில் பல ஓவியங்கள் வரையப்பெற்றிருந்தன. நாள், மீன்கள், சூரியன் முதலான கோள்கள் எவ்வெவ்விடத்தில் இராசிச் சக்கரத்தில் நின்றன என்பது குறித்த ஓவியம் ஒன்று வரையப்பட்டிருந்தது. இரதி, மன்மதன் குறித்த ஓவியம் ஒன்று இருந்தது கௌதம முனிவன், இந்திரன் கொண்ட பூனை வடிவம் ஆகிய உருவங்கள் ஓவியமாக அக்கப்பட்டிருந்தன. இவ்வாறு பாண்டிய நாட்டுப் பழக்கங்களாகிய தமிழர் பண்பாட்டுக் கூறுகள் பரிபாடல் மூலமும் வெளிப்படுகின்றன.

கலித்தொகையில் பண்பாடு

கலித்தொகையில் இடம்பெறும் ஏறு தழுவுதல் பற்றிய செய்தி தமிழர் பண்பாட்டில் குறிக்கதக்கதாகும். காடும் காடும், சார்ந்த நிலமாகிய முல்லை நிலப்பகுதியில் இந்த வீரவிளையாட்டு நிகழ்ந்தது. கொம்பு சீவப்பட்ட எருதுகளை அடக்கிய வீரர்களைப் பெண்கள்

விரும்பி மணம் முடித்தனர். தொழுவில் ஏறுகள் கட்டவிழிந்து விடப்படும். இளைஞர்கள் நீர்த்துறையிலும், ஆலமரத்திலும், மாமரத்திலும் உறையும் தெய்வங்களை வணங்கிய பின் தொழுவில் பாய்ந்து காளையோடு போராடுவர். மகளிர் மண் மீது நின்று ஏறுதழுவும் காட்சியை காண்பர். வீரர் சிலரின் மார்பில் காளைகள் கொம்புகளால் குத்தும். குடல் வெளியே தள்ளப்படும் ஏறுகளை அடக்கும் வீரர்கள் மக்களால் போற்றப்படுவர் ஏறுதழுவல் முடிந்தபின் ஊர் மன்றத்தில் மகளிரும் மைந்தரும் கைகோத்துக் குரவையாடுவர். ஏறு தழுவுதற்குத் தயங்கும் ஆயர் இளைஞன் ஆயர் மகள் கணவனாக ஏற்று கொள்ள மாட்டாள். ஆயர் பெண் எருமையின் கொம்பைச் தெய்வமாக வைத்து வழிபட்டுத் திருமணத்தை நடத்துவர். அதுபோல ஈகையே வாழ்க்கையின் தலையான ஒன்றாகும். பொருளின் பயனென கொடுப்பதாகும். கொடுப்பதால் குறைவில்லை என்பது ஆன்றோர் வாக்கு "ஈபவர்களுக்கே இறைவன் அருள்கிடைக்கும் இரப்பவர்களுக்கு ஈயவைத்தால் ஈபவர்களுக்கு அருள் வைத்தார்"4 இந்த அப்பரின் பாடல் இதற்கு வலு சேர்க்கிறது. கொடை தன்மை என்பது அனைவருக்கும் வந்துவிடாது ஒரு சிலருக்கே இந்த குணம் வாய்க்கபெறும். நிலையாமையை உணர்ந்தவர்களுடைய கொடையே எல்லோருக்கும் பயன்படும். ஈகை, அறம் பற்றி கலித்தொகையில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. இத்துடன் ஈயாமை இழிவு என அடிக்கடி வலியுறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"தொலைவாகி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவென
முலையிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ"5
இல்லென வரந்தோர்க்கொன்றீயாமை யிழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ"6
"இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமையிழிவெனச்
கடனறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமே"7

எனவரும் பாடல் வரிகள் வாயிலாக ஈயாமை இழிவு எனவும் ஈதலே உயர்வு எனவும் வலியுறுத்தப்படுவதுடன் நாம் வாழ்வில் ஏற்றம் காண்பதற்கு தன்னிடம் இருப்பதைப் பிறருக்கு கொடுக்க வேண்டும் எனக் கலித்தொகை கூறுகிறது.

புறநானூற்றில் பண்பாடு

புறநானூற்றை அக்காலப் பண்பாட்டு களஞ்சியம் என்று கூறலாம். அரசர்களுக்கு அஞ்சி வாழாத கல்வி செருக்கு புலவர்களில் இருந்தது எனக் புறநானூறு கூறுகிறது. தம்மை மதிக்காமல் பரிசளிக்க வந்த வேந்தர். காலந்தாழ்த்திப் பரிசளித்த கொடையாளி, அது போல தகுதியறிய பரிசில் வழங்க முயன்ற மன்னர், ஆகியோர் கொடையை அக்காலப்புலவர்கள் ஏற்கவில்லை.

"எத்திசைச் சொல்லினும் அத்திசைச்சோறே"8
"பெரிதே உலகம் பேணுநர் பரரே"9
"உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்"10

என்பன போன்ற உயர்ந்த சிந்தனைக் கூறுகள் புறநானூற்றில் உள்ளன.

பண்பாட்டில் நட்பிற்கும் மிக சிறந்த இடம் உண்டு கோப்பெரும் சோழன் பிசிராந்தையர் நட்பு முக்கியமானது கோப்பெருஞ்சோழன் சோழநாட்டு மன்னன் பிசிராந்தையார் பாண்டிய நாட்டில் உள்ள பிசிர் என்னும் ஊரில் பிறந்தவர். கோப்பெருஞ்சோழன் தனது மக்களோடு மனம் மாறுபட்டு வெறுப்புற்று உயிர் துறக்க எண்ணினான். வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பு கொண்டு உயிர் துறத்தலே அக்காலத்தில் வடக்கிருத்தல் என்பர். அவர் காவிரிக்கரையில் வடக்கிருந்த போது தன் பக்கத்திலிருந்த சான்றோரிடம் என் நண்பர் பிசிராந்தையார் என்னை தேடி வருவார் நான் உயிர் நீர்த்த பிறகு வந்தால் எனக்க அருகே அவனுக்கும் உயிரடக்கம் செய்து கொள்ள இந்த இடத்தை நான் அழித்தேன் என்று கூறி உயிர்விட்டார். அவர் சொன்னபடியே பிசிராந்தையார் வந்தார் நிகழ்ந்தது அறிந்தவுடன் பிசிராந்தையார் உயிர் நீர்த்தார். இதுதான் இன்றும் மிக சிறந்த பண்பாடு உச்சமாக நாம் கொண்டாடி வருகிறோம். சான்றோர்கள் சான்றோர்களை சேர்வார்கள் என்பது இந்த நிகழ்வின் மூலம் நமக்கு தெரிய வருகிறது. புலவர் ஒருவர் பரிசல் கொடுப்பதற்காக தன் தலையையே கொடுக்க வந்தான் குமணன் என்னும் மன்னன் புலவர் வறுமையை அகற்ற வசதி இல்லாத நிலையில் கொலையாளி ஒருவன் தன் வாளை அடகுவைத்தான் மற்றொருவன் பகைவர்கள் மீது போர் தொடுக்கவும் கருதினான்.

தமிழர் வீரத்தின் விளைநிலமாக தெரியும் புறநானூற்றில் பண்பாட்டு, கூறுகள் மிக அதிகமாக காணப்படுகின்றனர். போர் சார்ந்த பண்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கலாம்.

அவர்கள் போர் சார்ந்த நிகழ்வுகளில் சில மரபு சார்ந்த பழக்க வழக்கங்களை பின்பற்றி வந்தனர். பூச்சூடுதல், பகை நாட்டை அழித்தல், மரக்குடி மாண்பு என இவற்றை பலவகையாக பிரிக்கலாம். தமிழர்கள் நிரை கவருதல் போன்ற போர் நிகழ்வின் போதும் ஒவ்வொரு போர் நிகழ்வுக்கும் வெவ்வேறு விதமான பூக்களை சூடி போர்புரிந்துள்ளனர்.

"போந்தே வேம்பே ஆரைன வரூஉம்

மாபெரும் தானையர் மலைத்த பூவும்"11 என்று தொல்காப்பியம் கூறுகிறது. பூச்சூடுதல் என்பது தங்கள் நாட்டு வீரர்களை அடையாளப்படுத்துகின்ற அறிகுறியாகும். இந்த பண்பு தமிழர்களின் முறை சார்ந்த போர் நெறிகளை குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. ஆனால் ஒரு ஆய்விக்கரிய பல செய்திகள் இருப்பதையும் நாம் பார்க்கலாம். பகை நாட்டை அழித்த சங்ககால மன்னர்கள் அந்த நாட்டின் செல்வ வழகங்களை கொள்ளையிட்டும் அந்த நாட்டினை தீயிட்டு கொழுத்தியும் வளம் மிக்க நிலங்களை பாள்படுத்தியும் பகை நாட்டினை அழிக்கவும் செய்தனர். இத்தகைய செயல்கள் வரம்புமீறிய போர் குற்றமாக கருதப்படாமல் போருக்குரிய பழக்கவழக்கங்களாகப் கருதப்பட்டன. பண்டைய தமிழகத்தில் இப்படிப்பட்ட தொடர்ந்த போர்களுக்கு இடையேதான் மக்கள் வாழ வேண்டியிருந்தது. படையெடுத்துச்சென்றவர் பகை நாட்டின் மறச்செயல்கள் பலவாக இருந்தன. ஊக்கங்களை அழித்து நீர் நிலைகளை பாளாக்குதல் விளை நிலங்களை சிதைத்தல் மன்றங்களை அழித்தல் ஆகிய செயல்களை சொல்லலாம். அதுபோல பண்டைய வேந்தர்கள் காவல் மரத்தை போற்றி பாதுகாத்து வந்தார்கள். அம்மரமானது நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றும் என்று நம்பினார்கள் பழந்தமிழர் காவல் மரத்தினை வழிபாட்டிற்குரிய மரமாகவும் கொண்டிருந்தார்கள். வேங்கை, வேம்பு, புன்னை போன்ற மரங்களை காவல் மரங்களாக பழந்தமிழ் மன்னர்கள் போற்றி பாதுகாத்தார்கள் பகை மன்னனால் வெட்டி வீழ்த்தப்படாமல் காவல் மரத்தை காப்பது இன்றியமையாத கடமையாக கருதப்பட்டது. மன்னனின் காவல் மரத்தை வெட்டினால் தோல்வி உறுதியாகிவிடும் என்று நம்பினார்கள். அதனால் தான் பழந்தமிழ் மக்கள் வீரர்களை வைத்து இரவு பகலாக காவல் மரத்தை காத்து வைத்தனர். பகை மன்னனை அவமான படுத்த யானைகளை அந்த மரத்தில் கட்டிவிட்ட அந்த பழக்கம் இருந்தது ஆகையினால் காவல் நிறைந்த மரமாக இருந்தால் அந்த மரத்தை கடி மரம் என்று அழைத்தார்கள். கடி மரத்தை பகைவர்கள் அறியாதவாறு பாது காத்த செய்திகளை

"கடிமரம் துளங்கிய காரும் நெடநகர்

வினை புனை நல்லில் வெவ்வெரி நைப்ப"12 இதனோடு தொடர்புடைய செய்திகளை நாம் பாத்தோமானால் சங்ககால மன்னன் பகைவர்களை போர் கொள்ளும் போது நாட்டின் சுவரை பாள் படுத்துவது வழக்கமாகும். இதில் சிலர் தற்கால அழிவை மட்டம் ஏற்படுத்துவார்கள். தற்கால அழிவு என்பது நாட்டை பகைவர்கள் அழித்தாலும் மீண்டும் அவ்வளங்களை ஏற்படுத்தி கொள்ளும் வகையில் அமைவது. அதாவது நாட்டில் உள்ள செல்வங்களை கொள்ளையிடுவதும் குறங்களை அழிப்பதும் போன்றவையாகும். புவ்யாக குதுகுடுமி பெருவெழுதி பாதுகாப்புடைய பகைவர்களது இடங்களை கைப்பற்றி அந்த இடங்களில் கழுதைகளைக் கூட்டிக் கொண்டு ஏருகளை கூட்டி வளம் மிக்கும் நிலங்கள் அனைத்தையும் எதற்கும் பயன்படாத வகையில் பாளாக்கினார்.

"கடந்தேர் குழித்த ஞௌ;ளல் அரங்கண்

வெள்வாய்க் கழுதை புல்லினம் பூட்டி

பாழ் செய்றனை அவர்நனைந்தலை- நல்லெயில்"13 என்ற பாடலின் வழியே பகைவருக்கு செய்த அழிவின் இயல்பை நாம் அறிய முடியும்.

பகைவர் நாட்டிலுள்ள நெடி பரந்த ஊர்களில் தங்கியிருக்கும் மகளிரும், போரில் ஈடுபடாதவர்களும் அஞ்சி அலறிச் கொண்டு ஊர்பொதுவித்திற்குச் செல்லுமாறு சொல்லிவிட்டு அவ்ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்துவது உழபுல வஞ்சி என்பதை

"நேராதார் வளநாட்டைக்

மூரெரி கொளீஇ யன்று"14 என்ற புறப்பொருள் வெண்பாமாலை நூற்பா உணர்த்துகிறது. அதியமான் நெடுமான் பகைவர் நாட்டை வென்று, பகைநாட்டிற்கு எரியூட்டிய செயலானது மலையைச் சூழும் கருமுகில் போல இருந்த தன்மையினை

"முனைசுட எழுந்த மங்குல் மாப்புகை

மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்"15

என்ற பாடலின் மூலம் பகை நாட்டைத் தான் வென்ற பிறகும் மீண்டெழாத வண்ணம் தீமூட்டிய போர் பழக்கத்திறன் வெளிப்படுகிறது. பண்டைய தமிழர்கள் அனைவரும் வீரம் பொருந்தியவர்களாய் இருந்தனர். காற்றினால் முரசு அதிருவதைப் போருக்காக முரசு அறைகிறார்கள் என்று நினைத்துப் போருக்கு புறப்படும் வீரர் செறிந்தவர்களாக இருந்தனர். வீரம் நினைத்து காணப்பட்டாலும் போர்களத்தில் வீரத்துடன் போரிட்டு முதுகுப்புறத்தில் விழுப்புண் பட்டாலும் உயிரையே விடும் இயல்பினராய் இருந்தனர். போர்களத்தில் முகத்திலும், மார்பிலும் புண்பட்ட வீரனை எல்லோரும் போற்றுவா.; விழுப்புண் பெற்றான் என்று வியந்து பேசுவர். வீரக்கல் நாட்டி வணக்கம் செலுத்துவர். வீரக்கல் நாட்டி வணக்கம் செலுத்தவர். ஆனால் புறத்திலே புண்பட்ட வீரனை எல்லோரும் இகழ்வர். போர்களத்திலே புறம்பாட்டி ஓடியதற்கு அடையாளமாகிய அப்புண்ணைப் பார்க்குந்தோறும் பழித்தும் இழித்தும் பேசுவர். ஆனால் மானவீரர் ஒருபோதும் புறப்புண் தாங்கி உயிர்வாழ இசையார் என்பது மறகுடி மாண்பினரரின் உண்மை தன்மையை விளக்குகிறது. சேரலாதன் வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் கரிகால் பெருவளத்தானிடம் போரிட்டு புறமுதுகில் ஏற்பட்ட புண்ணுக்கு நாணி வடகிருந்து உயிரிட்டான் என்பது கரிகாலன் பெற்ற வெற்றியை விடச் சிறப்பாக கருதப்பட்டது என்பதை

"கலிகொள் யாணர் வெண்ணிப்பறந்தவை
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"16 என்னும் பாடல் விளக்குகிறது. புறந்த குழந்தையானது சதைப் பிண்டமாக பிறந்து இறந்தாலும் அதனை வாளால் கீறி புதைக்கும் பழக்கம் மக்களிடையே காணப்பட்டது என்பதனை "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளின்தப்பார்"17 என்னும் புறப்பாடல் உணர்த்துகிறது. நோய்ப்பட்டு இறந்தவர்களையும் வாளால் வெட்டி தருப்பைப் புல்லி; கிடத்தி அந்தணர்கள் முன்னிலையில் புதைக்கும் வழக்கமும் மறக்குடி மாண்பாக திகழ்ந்தது இத்தகைய மறப்பண்பு நிகழ்ந்தவர்கள்.

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"18என்னும் நற்குணத்தவர்களாக காணப்பட்டார்கள்.

முடிவுரை

பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறைகளைபொறுத்தவரை காதலும், வீரமும் இரு கண்களாக கொண்டு திகழ்ந்ததை இலக்கிய பிரதிகளின் வழி கவனிக்க முடிகிறது. இந்த ஆய்வு அதன் ஒரு பகுதியாக உள்ள நட்பு, போர் பற்றிய சித்திரங்கள், ஏறுதழுவுதல் போன்ற நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றை கோடிட்டு காட்டுவதை கவனத்தில் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல்:95.
2. புறநானூறு, 109:3-8.
3. புறநானூறு, 335:4-6.
4. திருமறை புது பதிகம், ரசபாடல்:10.
5. கலித்தொகை, பாலைக்கலி:1:11-12.
6. மேலது, 1:15-16.
7. மேலது, 1:19-20.
8. புறநானூறு,206:13.
9. மேலது, 297-7.
10. மேலது, 197-16.
11. தொல்காப்பியம், பொருளதிகாரம் :63.
12. புறநானூறு, 23:9-10.
13. மேலது, 1-3.
14. மேலது, 140.
15. மேலது, 103:6-7.
16. மேலது, 66:6-8.
17. மேலது, 74.
18. மேலது, 192.

********* ********* ********** ********* ********* ********** ********** **********